**கவனிக்க.-** *2015.03.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1908 - 2015 මාර්තු මස 27 වැනි සිකුරාදා - 2015.03.27

*1908 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 380 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 384 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2015, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க தகவல் திணைக்களம்

பிரசாரப் பிரிவில் பகுப்பாளர் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக்கொள்ளல்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவில் பகுப்பாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக்கொள்வதற்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இந்த அறிவித்தலில் 'பணிப்பாளர் நாயகம்' என்ற சொற்களுக்கு பொருள்படுவது அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகமென்பதாகும்.

2. **நேர்முகப் பரீட்சை.-** நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

| பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் பகுதிகள் | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 40 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 25 |
| மேலதிக தொழில்சார் அனுபவம் | 30 |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

3. **நியமிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கை.-** அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவில் பகுப்பாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) பதவிகளுக்கு (ஒப்பந்த அடிப்படையில்) 3 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4. **நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி.-** நியமனம் அமுல்படுத்தப் படும் திகதி அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக் கப்படும்.

5. **சேவை நிபந்தனைகள்.-** அரச சேவையில் நியமனம் சம்பந்தமாக கடைப்பிடிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கும் 2014.05.09 ஆந் திகதிய அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவில் பகுப்பாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக் கொள்ளும் விதிமுறைக்கென இயற்றப்பட்ட சட்டங்களுக்கும், நிபந்தனை களுக்கும், அவ்வாறான இணைத்துக்கொள்வதற்கான விதிமுறைகளில் அல்லது பின்பு இயற்றப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்பட்ட விதத்தில் தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி அரசாங்க தகவல் திணைக் களத்தில் பகுப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

6. தமக்கு வழங்கப்பட்ட பதவிக்கான பொறுப்பை குறிப்பிட்ட தினத்தில் பொறுப்பேற்க முடியாமல் போனவிடத்து அல்லது நியமனம் வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை பொறுப்பேற்க மறுத்தாலோ அல்லது விலகிப் போனாலோ விண்ணப்பதாரியின் நியமனத்தை இரத்துச்செய்ய அரச சேவை ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

7. **மாதாந்தக் கொடுப்பனவு.-** ரூபா 25,000 ஆகும்.

8. **தகைமைகள்.-** விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று,

(i) கல்வித் தகைமைகள்.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலோ அல்லது பட்டப்படிப்பை நடாத்துவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினாலோ வழங்கப்பட்ட பட்டதாரிச் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும் ;

(ii) தொழில்சார் தகைமைகள்.- மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறியில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் ;

(iii) அனுபவம்.- அரசாங்கத்தில் பதிவுசெய்த பிரசுர நிறுவனம் ஒன்றில் கட்டுரைகளை வகுப்புச் செய்வதில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் ;

(iv) உடற்தகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கை யில் தேவைப்படும் பிரதேசத்தில் சேவையாற்றவும், பதவியின் கடமை நிமித்தம் பணியாற்றக்கூடிய போதியளவு உடல் மற்றும் உள ரீதியாக இயலுமானவராக இருத்தல் வேண்டும் ;

(v) வேறு தகைமைகள் :

- (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
- (ii) சிறந்த பண்பாளராக இருத்தல் வேண்டும் ;
- (iii) பதவியில் இணைத்துக்கொள்வதற்கான சகல தகைமை களும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

9. **வயது.-** குறைந்தபட்சம் 18 வருடங்கள் ; அதிகபட்சம் 55 வருடங்கள்.

10. **விண்ணப்பிக்கும் முறை.-** (அ) இந்த அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திலுள்ள விதத்தில் ஏ4 (A4) அளவுத்தாளில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும் என்பதை விசேடமாக கருத்தில் கொள்ளவேண்டும். விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்ட சகல தகவல்களும் தமது கையெழுத்துக்களால் தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்றவிதத்தில் இல்லாத விண்ணப்பப்படிவமும், பூரணமான தகவல்களை வழங்காத விண்ணப்பப்படிவமும் அறிவிக்கப்படாமலே நிராகரிக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியை தம்முடன் வைத்திருத்தல் உபயோகமாக இருக்கும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் வழங்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரி விசாரித்து உறுதிப்படுத்தல் வேண்டும். அப்படி இல்லாவிடில் அந்த விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படக்கூடும்.

(ஆ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில், "அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" என்ற விலாசத்திற்கு 2015.04.24 ஆந் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக, "அரசாங்க தகவல் திணைக்களத்தில் பகுப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளல்" என்ற சொற்களை குறிப்பிடுதல் வேண்டும். அத்தினத்திற்குப் பின்பு கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) சகல விதத்திலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போனது மற்றும் தாமதமாகியது சம்பந்தமான எந்த முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது.

11. விண்ணப்பதாரி தெரிந்துகொண்டே தகவல்களை தவறாக சமர்ப்பித்திருப்பதாக, அல்லது ஏதாவது முக்கிய தகவல்களை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பதாகத் தெரியவந்தால் அவர் சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

12. இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத வேறு ஏதாவது ஒழுங்குவிதிகள் இருந்தால் அது சம்பந்தமாக அரச சேவை ஆணைக் குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரப்படி,

அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
இல. 163, கிருலப்பனை மாவத்தை,
கொழும்பு 05,
2015, மாச்சு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

**அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவில் பகுப்பாளர் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக்கொள்ளல்**

1. தோற்றும் மொழி மூலம் : [ ]
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2. தனிப்பட்ட விபரங்கள் :

2.1 முதலெழுத்தை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : Mr./Mrs./Miss :----.
உ-ம் : SILVA, A. B.

2.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.4 தனிப்பட்ட விலாசம் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.5 பால் : ஆண் - 0 [ ]
பெண் - 1
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2.6 விவாகமானவரா ? /விவாகமாகாதவரா ? [ ]
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2.7 இனம் : [ ]
(சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்கள்-4, ஏனையவர்-5)
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.9 பிறந்த திகதி :

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

2.10 தொலைபேசி இலக்கம் (இருந்தால்) :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

3. கல்வித் தகைமைகள் :

| பல்கலைக் கழகம் | பெற்ற பட்டம் | பட்டம் செல்லு படியாகும் திகதி | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4. தொழில்சார் தகைமைகள் :

| நிறுவனம் | பெற்ற டிப்ளோமா | டிப்ளோமா செல்லுபடி யாகும் திகதி | காலம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

5. வேறு தகைமைகள் :----.

6. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
மேற்கூறப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை சரியென உறுதியளிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. **கையொப்பத்தை உறுதி செய்தல் :**
இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி .................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளேன் எனவும், .................................. ஆந் திகதி என் முன்னிலையில் அவர் கையொப்பம் இட்டார் என்பதையும் இதன் மூலம் உறுதிசெய் கின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிசெய்யும்
அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

(விண்ணப்பப்படிவத்தில் இடப்படும் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றில் அதிபர்/சமாதான நீதவான்/ பதிவாணையாளர்/சட்டத்தரணி/நொத்தாரிசு/முப்படை அதிகாரிகள் அல்லது 22,935 ரூபா அல்லது அதற்கும் அதிகமாக மாதாந்த சம்பளம் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

3-891

## அரசாங்க தகவல் திணைக்களம்

பிரசாரப் பிரிவில் வடிவமைப்பு பகுப்பாளர் பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக்கொள்ளல்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவில் வடிவமைப்பு பகுப்பாளர் பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக் கொள்வதற்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இந்த அறிவித்தலில் 'பணிப்பாளர் நாயகம்' என்ற சொற்களுக்கு பொருள்படுவது அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகமென்பதாகும்.

2. **நேர்முகப் பரீட்சை**.- நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

| பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் பகுதிகள் | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 40 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 25 |
| மேலதிக தொழில்சார் அனுபவம் | 30 |
| வடிவமைப்பு நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

3. **நியமிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கை**.- அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவில் வடிவமைப்பு பகுப்பாளர் பதவிக்கு (ஒப்பந்த அடிப்படையில்) ஒரு (1) வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4. **நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி**.- நியமனம் அமுல்படுத்தப் படும் திகதி அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக் கப்படும்.

5. **சேவை நிபந்தனைகள்**.- அரச சேவையில் நியமனம் சம்பந்தமாக கடைப்பிடிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கும் 2014.05.08 ஆந் திகதிய அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவில் வடிவமைப்பு பகுப்பாளர் பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக்கொள்ளும் விதிமுறைக்கென இயற்றப்பட்ட சட்டங்களுக்கும், நிபந்தனைகளுக்கும், அவ்வாறான இணைத்துக்கொள்வதற்கான விதிமுறைகளில் அல்லது பின்பு இயற்றப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்பட்ட விதத்தில் தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி அரசாங்க தகவல் திணைக் களத்தில் உதவிப் பகுப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

6. தமக்கு வழங்கப்பட்ட பதவிக்கான பொறுப்பை குறிப்பிட்ட தினத்தில் பொறுப்பேற்க முடியாமல் போனவிடத்து அல்லது நியமனம் வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை பொறுப்பேற்க மறுத்தாலோ அல்லது விலகிப் போனாலோ விண்ணப்பதாரியின் நியமனத்தை இரத்துச்செய்ய அரச சேவை ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

7. **மாதாந்தக் கொடுப்பனவு**.- ரூபா 25,000 ஆகும்.

8. **தகைமைகள்**.- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று,

(i) கல்வித் தகைமைகள்.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலோ அல்லது பட்டப்படிப்பை நடாத்துவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினாலோ வழங்கப்பட்ட பட்டதாரிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ii) தொழில்சார் தகைமைகள்.- மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறியில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் ;

(iii) அனுபவம்.- அரசாங்கத்தில் பதிவுசெய்த பிரசுர நிறுவனம் ஒன்றில் கட்டுரைகளை பகுப்புச் செய்வதில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் ;

(iv) உடற்தகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கை யில் தேவைப்படும் பிரதேசத்தில் சேவையாற்றவும், பதவியின் கடமை நிமித்தம் பணியாற்றக்கூடிய போதியளவு உடல் மற்றும் உள ரீதியாக இயலுமானவராக இருத்தல் வேண்டும் ;

(v) வேறு தகைமைகள் :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) சிறந்த பண்பாளராக இருத்தல் வேண்டும் ;
(iii) பதவியில் இணைத்துக்கொள்வதற்கான சகல தகைமை களும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

9. **வயது**.- குறைந்தபட்சம் 18 வருடங்கள் ; அதிகபட்சம் 55 வருடங்கள்.

10. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இந்த அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திலுள்ள விதத்தில் ஏ4 (A4) அளவுத்தாளில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும் என்பதை விசேடமாக கருத்தில் கொள்ளவேண்டும். விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்ட சகல தகவல்களும் தமது கையெழுத்துக்களால் தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்றவிதத்தில் இல்லாத விண்ணப்பப்படிவமும், பூரணமான தகவல்களை வழங்காத விண்ணப்பப்படிவமும் அறிவிக்கப்படாமலே நிராகரிக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியை தம்முடன் வைத்திருத்தல் உபயோகமாக இருக்கும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் வழங்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரி விசாரித்து உறுதிப்படுத்தல் வேண்டும். அப்படி இல்லாவிடில் அந்த விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படக்கூடும்.

(ஆ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில், "அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" என்ற விலாசத்திற்கு 2015.04.24 ஆந் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக, "அரசாங்க தகவல் திணைக்களத்தில் வடிவமைப்பு பகுப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளல்" என்ற சொற்களை குறிப்பிடுதல் வேண்டும். அத்தினத்திற்குப் பின்பு கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) சகல விதத்திலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போனது மற்றும் தாமதமாகியது சம்பந்தமான எந்த முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது.

11. விண்ணப்பதாரி தெரிந்துகொண்டே தகவல்களை தவறாக சமர்ப்பித்திருப்பதாக அல்லது ஏதாவது முக்கிய தகவல்களை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பதாகத் தெரியவந்தால் அவர் சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

12. இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத வேறு ஏதாவது ஒழுங்குவிதிகள் இருந்தால் அது சம்பந்தமாக அரச சேவை ஆணைக் குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரப்படி,

அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
இல. 163, கிருலப்பனை மாவத்தை,
கொழும்பு 05,
2015, மாச்சு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

**அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவில் வடிவமைப்பு பகுப்பாளர் பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக்கொள்ளல்**

1. தோற்றும் மொழி மூலம் :
   சிங்களம் - 1
   தமிழ் - 2
   ஆங்கிலம் - 3 [ ]
   (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2. தனிப்பட்ட விபரங்கள் :

   2.1 முதலெழுத்தை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : Mr./Mrs./Miss :----.
   உ-ம் : SILVA, A. B.

   2.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

   2.4 தனிப்பட்ட விலாசம் (சிங்களத்தில்/தமிழில்) :----.

   2.5 பால் : ஆண் - 0
   பெண் - 1 [ ]
   (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

   2.6 விவாகமானவரா ? /விவாகமாகாதவரா ?
   விவாகமாகாதவர் - 1
   விவாகமானவர் - 2 [ ]
   (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

   2.7 இனம் :
   (சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்கள்-4, ஏனையவர்-5) [ ]
   (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

   2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :
   [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

   2.9 பிறந்த திகதி :
   ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

   2.10 தொலைபேசி இலக்கம் (இருந்தால்) :
   [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

3. கல்வித் தகைமைகள் :

| பல்கலைக் கழகம் | பெற்ற பட்டம் | பட்டம் செல்லுபடியாகும் திகதி | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4. தொழில்சார் தகைமைகள் :

| நிறுவனம் | பெற்ற டிப்ளோமா | டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி | காலம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

5. வேறு தகைமைகள் :----.

6. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
   மேற்கூறப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை சரியென உறுதியளிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. **கையொப்பத்தை உறுதி செய்தல் :**
   இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி .................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளேன் எனவும், .................................. ஆந் திகதி என் முன்னிலையில் அவர் கையொப்பம் இட்டார் என்பதையும் இதன் மூலம் உறுதிசெய்கின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிசெய்யும் அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

(விண்ணப்பப்படிவத்தில் இடப்படும் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றில் அதிபர்/சமாதான நீதவான்/பதிவாணையாளர்/சட்டத்தரணி/நொத்தாரிசு/முப்படை அதிகாரிகள் அல்லது 22,935 ரூபா அல்லது அதற்கும் அதிகமாக மாதாந்த சம்பளம் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

3-892

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மாச்சு 09.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | மினுவன்கொட | ஹொரகம்பெல்ல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வடக்கு அலுத்குரு கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா |

3-728

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கு வெளி விண்ணப்பதாரிகளைச் சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை-2014 (2015)

இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2015.03.27 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாததும் 30 வயதிற்குக் கூடாததுமான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன (அதன்படி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ள முடிவது 1997.03.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு மற்றும் 1985.03.27 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்பு பிறந்த திகதியையுடையவர்களுக்கு மாத்திரமாகும்.) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2015.04.27 ஆகும். சகல விண்ணப்பப்படிவங்களும் இத்தினத்திற்கு முன்பு "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், திட்டமிடல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, த. பெ. இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். எந்த விண்ணப்பப்படிவமும் தனிப்பட்ட பெயருக்கோ

அல்லது கையில் கொண்டுவந்து பாரமளித்தலோ கூடாது. பூரணமற்ற மற்றும் முறையற்ற, தேவையான தராதரங்களைக் கொண்டிராத, முறைப்படி பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு தமது திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும். இப்பரீட்சையை நடாத்துவதற்கான பரீட்சை நிலையம் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நகரங்களும் அதன் இலக்கங்களும் 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் இந்நகரத்தையும் அதன் இலக்கத்தையும் தேர்ந்தெடுத்து பூரணப்படுத்தல் வேண்டும். தேர்ந்தெடுத்த நகரத்தை பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. இருந்தும் பரீட்சை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு போதுமானளவு விண்ணப்பதாரிகளைக் கொண்டிராத நகரங்களின் விண்ணப்பதாரிகள் கிட்டிய ஏனைய பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர். எவ்வாறிருந்தும் குறித்த சகல நகரங்களிலும் அல்லது கூடுதலான நகரங்களில் பரீட்சை நிலையம் அமைப்பதற்குப் போதுமானளவு விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**1 ஆம் அட்டவணை**

*பரீட்சை நிலையம் அமையப்பெறும் நகரங்களும் அதன் இலக்கங்களும்*

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணறாகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

1. **விண்ணப்பம் கோரப்படும் பதவி**.- புகையிரத நிலைய அதிபர் - தரம் III.

3. **பதவியின், கடமையின் தன்மை**.- இலங்கை புகையிரத திணைக்களத்தின் கீழுள்ள புகையிரத நிலையங்களின் செயற்பாடுகளுக்கு ஏற்புடைய புகையிரத முகாமையாளரின் பிரதிநிதியாக செயற்பட்டு புகையிரத முகாமையாளரினால் குறிப்பாக ஒப்படைக்கப்படும் ஆள் நிருவாகம், நிதி, வாணிப நடவடிக்கை கூட்டிணைப்புச் செயற்பாடு, இயக்க நடவடிக்கை, பிரவேசப்பத்திரமும் அதன் கணக்கீடுகளும் உள்ளடங்கலாக பலதரப்பட்ட சொரூபங்களையுடைய கடமைகளைச் செய்தல் வேண்டும்.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- புகையிரத நிலைய அதிபர் - தரம் III இற்கான சம்பள அளவுத்திட்டம் (எம்என் - 3 - 2006 - ஏ) ரூபா 15,005-4 x 180-6 x 240- 11 x 320-20 x 360-ரூபா 27,885 ஆகும்.

5. (அ) **கல்வித் தகைமைகள் :**

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் உடன் கணிதம் மற்றும் வேறு விடயங்கள் இரண்டில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

அத்துடன்

(ii) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் மூன்று (3) பாடங்களில் (பொதுவான பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் (பழைய பாடத்திட்டத்தின்கீழ் மூன்று (3) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

(ஆ) **உடற்தகுதி :**

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை புரிவதற்கு சகல உடற்தகுதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) பதவியின் கடமைகளை மேற்கொள்ளக்கூடியளவுக்கு போதுமான உடற்தகுதிகளையும் உள தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) உயரம் 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாமலும், நெஞ்சளவு வெளிச்சுவாசத்தின்போது 32 அங்குலத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) 6/6 அளவுள்ள கண் பார்வை பரிசோதனையிலும் தகுதி பெறல் வேண்டும்.

(இ) **வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

***குறிப்பு***.- விண்ணப்பதாரி இவ்வறிவித்தல் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று சகல தகுதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.- மேலுள்ள (5) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு திறந்த எழுத்துமூல போட்டிப் பரீட்சையை நடாத்தி

விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

**7. ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் பரீட்சைத் திட்டம் :**

(i) இப்பரீட்சை 2015 ஆம் வருடத்தில் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும்.

(ii) பரீட்சை முறை :

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் ;

(ஆ) சகல கேள்விகளுக்கும் தோற்ற முடிவது மேற்குறிப்பிட்ட (5) இன்கீழ் தகுதிபெற்றுள்ள மொழி மூலம் மாத்திரமாகும். தேர்ந்தெடுத்த மொழி மூலத்தை பின்பு மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iii) பரீட்சை விடயங்கள் :

(அ) மொழித்தேர்ச்சி

(ஆ) நுண்ணறிவு

(iv) விடய உள்ளடக்கம் :

(அ) மொழித்தேர்ச்சி
(காலம் : 1 மணித்தியாலம் 30 நிமிடம்) - புள்ளி 100 ஆகும்.

இக்கேள்வித்தாள் இரு பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு பிரிவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும். சகல கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

I ஆம் பிரிவு.- இப்பிரிவில் கட்டுரையும் சுருக்கமும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

II ஆம் பிரிவு.- மொழி பற்றி விண்ணப்பதாரியின் புரிந்துகொள்ளுதலைப் பரிசீலிக்கும் பொருட்டு அம்சங்கள் பலவற்றைக் கொண்டு இரண்டாம் பிரிவு உள்ளடக்கப்பட்டிருக்கும். இவ்வம்சங்கள் வாயிலாக கீழ் கோடிடப்பட்டுள்ள சொற்களின் கருத்தை தனி வாக்கியத்தில் கூறுமாறு அல்லது அதுபற்றி விரிவான குறிப்பு எழுதுமாறு அல்லது வழங்கப்பட்டுள்ள கேள்விக்கு தரப்பட்டுள்ள விடைகளின் மத்தியில் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்குமாறு விண்ணப்பதாரிகள் வேண்டப்படுவார்கள்.

(ஆ) நுண்ணறிவு (காலம் : 1 மணித்தியாலம்)
- புள்ளி 100 ஆகும்.

விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான ஆற்றலையும் விவரிக்கும் ஆற்றலையும் சரியான தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடும் வகையில் இக்கேள்வித்தாள் அமையப்பெற்றிருக்கும். பல்வித மற்றும் சுருக்க விடையளித்தல் அமைப்பில் 50 கேள்விகள் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் சகல கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கும் முறை.- ஒவ்வொரு விடயத்திலும் தகுதி பெறுவதற்காக 50% புள்ளிகள் வீதம் அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும். இப்பரீட்சையில் இரு விடயங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்திபெறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தராதரங்கள் பரிசீலனை செய்யப்படும். இந்நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிட எண்ணிக்கைக்கேற்ப புகையிரத நிலைய அதிபர் III ஆம் வகுப்பின் பதவிக்கு நியமிக்கப்படுவர். நியமிப்பு செய்வதற்காக விண்ணப்பதாரிகளைத் தேர்ந்தெடுப்பது மேலுள்ள 6 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளின்படி பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள திறமையின் வரிசைப்படியாகும்.

**8. விண்ணப்பப்பத்திரம் தயாரிப்பதற்கும் பூரணப்படுத்துவதற்குமான அறிவுறுத்தல்.**- (i) விண்ணப்பப்படிவத்தை ஏ4 (துட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில்–

1 ஆம் பக்கத்தில் 1 இலிருந்து 3 வரையிலான விடயங்களும்
2 ஆம் பக்கத்தில் 4 இலிருந்து 9 வரையிலான விடயங்களும்
3 ஆம் பக்கத்தில் 10 இலிருந்து 11 வரையிலான விடயங்களும்
4 ஆம் பக்கத்தில் 12 மற்றும் 13 ஆகியவையும், கையொப்பத்தை உறுதிப்படுத்தலும் திணைக்கள/ நிறுவனப் பிரதானியின் உறுதிப்படுத்துகையும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமற்ற வகையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளல் உமக்கு பிரயோசனப்படக் கூடியதாகவிருக்கும். மேலும் பூரணப்படுத்தும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதா என்று விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் அவசியமாகும்.

(ii) குறிப்பிட்ட பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் 750 ரூபாவாகும். அதை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவிலிடும் வகையில் நாட்டின் எப்பாகத்திலேனும் அமைந்துள்ள தபால் அலுவலகத்தில் செலுத்த முடியுமாகும். அவ்வாறு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு அதன் ஒரு ஓரமாக விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை இணைத்தல் மற்றும் வேறு வழிகளில் பணம் செலுத்துதல் விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும். பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமுடையதாக இருக்கும்.

(iii) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் - III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2015)” எனவும் நீர் பரீட்சைக்கு தோற்ற தேர்ந்தெடுத்த நகரத்தையும் அதன் இலக்கத்தையும் குறிப்பிடவும்.

(iv) வெளி விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், அ. நி. சு. இல. 06/2006 இன்படி

ரூபா 19,755 ஆன மாதாந்த ஆரம்ப சம்பளத்தை அல்லது அதற்கு கூடிய ஆரம்ப சம்பளத்தை பெறும் அரச உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோத்தர்களின் கையொப்பம் தமக்கு கிட்டிய சேவைப் பிரதானியினால் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவர்களின் விண்ணபப்படிவம் திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(vi) தராதரங்களை கொண்டுள்ளவர்கள் மாத்திரம் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, குறிப்பிட்ட தினம் அல்லது அத்தினத்திற்கு முன்பு விண்ணபப்படிவம் முன்வைத்துள்ள இவ்றிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையை உடைய விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளரினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்படல் இப்பதவிக்கு விண்ணபதாரி தகுதி பெற்றுள்ளார் எனக் கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின்படி தராதரங்களைக் கொண்டுள்ளாராவென பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தராதரங்கள் இல்லை என தெரியவருமிடத்து அவ் விண்ணபதாரியின் பரீட்சை போட்டியிடுகை இரத்துச் செய்யப்படும்.

(vii) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு இரண்டு மூன்று நாட்களுக்கு பின்பும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவித்தல் வேண்டும். நீர் வைத்துக்கொண்ட விண்ணபப்படிவத்தின் உறுதிப் படுத்தப்பட்ட புகைப்படப் பிரதியையும் பதிவுத்தபால் மூலம் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியேயான பிரதேசமாக இருப்பின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும், குறிப்பிட்ட உமது வேண்டுகோள் கடிதத்தையும் உம்முடன் வைத்துக் கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்துக்கு அறிவித்தல் மிகவும் பயனுடையதாகவிருக்கும். இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது விண்ணபதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் உறுதிப்படுத்தும் பொருட்டு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(viii) பரீட்சை விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு முன்பு தமது பரீட்சை அனுமதி அட்டையின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளில் பரீட்சை மேற்பார்வை யாளரிடம் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை முன்வைக்க வேண்டியதுடன், அவ்வாறில்லாதவிடத்து பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது.

(ix) இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் உறுதிப்படுத்தும் பொருட்டு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(x) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தராதரங்களை பெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

(xi) பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாகும். அச்சட்டதிட்டங்களை மீறுகின்றபோது பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும். வர்த்தமானி அறிவித்தலின் 7(v) ஆம் பந்தியின்படி எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணபதாரிகளின் முழுப்புள்ளிகளின் திறமையின் வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் ஆவணமொன்று புகையிரத பொது முகாமையாளருக்கு கிடைக்கப்பெறும். பெறுபேறுகள் ஆவணத்திற்குள் உள்ளடக்கப்பட வேண்டிய சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் தொகையையும் நிகழும் வெற்றிடத்திற்கேற்ப புகையிரத பொது முகாமையாளரின் வேண்டு கோளுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் வழங்குதல் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exam.gov.lk வலயத்தின் ஊடாக பிரசித்தப்படுத்தல் பரீட்சைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

9. **சேவை நிபந்தனை.**- III ஆம் வகுப்பு புகையிரத நிலைய அதிபர் தரத்தின் பதவிக்குச் சேர்த்தக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் 3 வருடகால தகுதிகாண் காலவெல்லைக்கு உட்பட்டவர்களாகும். III ஆம் வகுப்பு புகையிரத நிலைய அதிபர் தரத்தின் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட தினத்திலிருந்து 3 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமை தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். தகுதிகாண் காலவெல்லைக்குள் புகையிரதப் பயிற்சிப் பாடசாலையில் 6 மாத காலம் புகையிரத நிலைய அதிபர் சேவையின் சட்டதிட்டங்களும் தொழில்சார் பயிற்சிகளும் வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் புகையிரத பொது முகாமையாளரினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்.

10. **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை.**- (i) இப்பதவி நிரந்தர மானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். தற்போது விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் அதற்காக பங்குப் பணம் செலுத்துதல் வேண்டும்.

(ii) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் ஏற்பாட்டின்படி அரச சேவைக்குச் சேர்ந்த மொழியைத் தவிர்ந்த மற்றைய அரச கரும மொழி தேர்ச்சியை 5 வருட காலத்திற்குள் பெறல் வேண்டும். அத்தேர்ச்சியை பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றம் தேர்ச்சியைப் பெறும் வரையில் மறுக்கப்படும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக்கோவையினதும், நிதிப்பிரமாணத்தினதும் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள தாபன செயற்பாட்டு அமைப்பு நியதிகள் கோவையின் ஏற்பாடுகளுக்கும் கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும் மற்றும் அடிக்கடி அரசாங்கத்தினால் விடுக்கப்படும் கட்டளைகளுக்கும், திணைக்கள உபதேசங்களுக்கும் கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும்.

11. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி கருத்துக்களுக்கிடையில் ஏதேனும் ஒற்றுமை யின்மை அல்லது பொருந்தாத்தன்மை அல்லது வேறுபாடுகள் உள்ளதாக தெரியவருமிடத்து அவ்வறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூல அறிவித்தலின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வீ. அமரதுங்க,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு 10,
2015, மாச்சு 10.

(இதன்படி ஏ4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கு முன்பு விண்ணப்பம் கோரல் அறிவித்தலை நன்றாக வாசித்து புரிந்து கொள்ளவும்.)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கு வெளி விண்ணப்பதாரிகளைச் சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூல போட்டிப் பரீட்சை- 2014 (2015)**

Open Competitive Examination for Recruitment for The Post of Station Master Grade - III in Sri Lanka Railway Department - 2014(2015)

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

பிரசாவுரிமை :
பரம்பரை மூலம் - 1
பதிவு மூலம் - 2
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

| பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் : | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1 ஆவது விருப்பம் | | |
| 2 ஆவது விருப்பம் | | |

பரீட்சை அறிவித்தலின் முதல் பந்தியை பார்க்கவும். விண்ணப் பிக்கும் நகரத்தை பின்பு மாற்ற இடமளிக்கப்படமாட்டாது.

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :–

(i) சிங்களத்தில்/தமிழில் :————.
(ii) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :————.
(உதா : GUNAWARDHANA, M. G. B. S. K.)

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :–

(i) சிங்களத்தில்/தமிழில் :————.
(ii) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்தில்) :————.

3. நிரந்தர முகவரி :–

(i) சிங்களத்தில்/தமிழில் :————.
(ii) ஆங்கிலத்தில் :————.

4. ஆண்/பெண் தன்மை :—

பெண் - 1
ஆண் - 0
(பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

5. இனத் தொகுதி :
சிங்களவர் - 1, இலங்கைத் தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம்கள் - 4, பறங்கியர் - 5, மலாயர் - 6
(பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

6. தேசிய ஆள் ஆளடையாள அட்டை இலக்கம் :

7. வதிவிடம் :

(i) கிராம அலுவலர் பிரிவு :————. அதன் இலக்கமும் :
(ii) பிரதேச செயலாளர் பிரிவு :————.
(iii) மாவட்டம் :————.

8. (i) பிறந்த திகதி :–

ஆண்டு : மாதம் : திகதி :

(ii) 2015.04.27 ஆந் திகதியன்று வயது :–

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

9. (அ) கல்வித் தகைமை :

(i) க. பொ. த. (சா. தரம்) :
சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |

(ii) க. பொ. த. (உயர் தரம்) :
சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

10. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(ஏற்புடைய கூட்டில் ✓ அடையாளம் இடுக)

11. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மையானதெனவும் சரியானதெனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் ஏதாவது பகுதி பூரணப்படுத்தப்படாததால் அல்லது பிழையான முறையில் அல்லது உண்மைக்குப் புறம்பான முறையில் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் விண்ணப்பத்தன்மை நிராகரிக்கப்படும் என்பதையும், பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு மேற்குறிப்பிட்ட விடயம் தெரியவருமிடத்து பதவிக்கான நியமனம் இரத்துச்செய்யப்படும் என்பதை நான் நன்றாக அறிவேன். அதனால் ஏற்படும் நஷ்டத்தை நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்வேன்.

(ஆ) மேலுள்ள (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதாக நான் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பிறகு தெரியவருமிடத்து பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். அதன் மூலம் ஏற்க நேரும் நஷ்டத்தையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்வேன்.

(இ) ............................. ஆந் திகதி தபால் அலுவலகத்திற்கு ரூபா 750 ஐச் செலுத்திப் பெற்றுக்கொண்ட இலக்கம் ........................................... உடைய பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| |
|---|
| பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு அதன் ஓரத்தில் ஒட்டவும்<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளவும்) |

(ஈ) இப்பரீட்சையின் நிபந்தனைகளை கடைப்பிடிக்க இணங்குகிறேன்.

(உ) மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக புகையிரத ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவதாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. ................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ..................... ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
திகதி :————.

(தயவுசெய்து உத்தியோக இலச்சினையைப் பொறிக்கவும்.)

13. **திணைக்கள/நிறுவன தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. ................. .................. அவர்கள் .............................. திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................................. ஆக சேவை புரிகிறார். அவருக்கு எதிராக முற்றுப்பெறாத ஒழுக்காற்று நடவடிக்கை உள்ளது/இல்லை. அவரின் வேலை நடத்தை, வேலைக்கு சமுகம் தரல் திருப்திகரமானது/ திருப்திகரமற்றது. குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது. அவர் புகையிரத நிலைய அதிபர் - III ஆம் தரத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுமிடத்து இத்திணைக்களத்திலிருந்து/ நிறுவனத்திலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாதென தெரிவித்துக் கொள்கிறேன். (பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும்.)

————,
திணைக்கள/நிறுவன தலைவரின்
கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
திகதி :————.

(தயவுசெய்து உத்தியோக இலட்சினையைப் பொறிக்கவும்.)

3-727

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தர அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2014 (2015)

அரச சேவை ஆணைக்குழுவின் தொடர் இலக்கம் NSCC/6/25/090/SR மற்றும் 2011.08.26 ஆந் திகதிய பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் அலுவலர்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறையின் 8 ஆவது பிரிவின் ஒழுங்குவிதிகளுக்கிணங்க பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் அலுவலர்களுக்காக உரிய 1 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2015, யூலை மாதம் நடாத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் அலுவலர்களுக்காக இந்தப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

3. (i) இந்தப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், பரீட்சைகள் சம்பந்தமாக அவரினால் நியமப்படுத்தப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதித்துரைக்கப்பட்ட இவ்வொழுங்கு விதிகள் வர்த்தமானி அறிவித்தல் பகுதி I : தொகுதி II (அ) வில் அச்சிடப்பட்டுள்ளது. இந்த ஒழுங்குவிதிகளினை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

4. **தகைமைகள்.**- பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தர நியமனத்தினைப் பெற்றுள்ள அலுவலர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெறுவர்.

5. விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்திற்கிணங்க விண்ணப்பதாரிகள் சுயமாக விண்ணப்பப் படிவத்தினைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சார்த்திகள் மூலம் தமது நியமன அதிகாரியினால் 2015.04.17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். 2015.04.17 ஆந் திகதிக்கு முன்பதாக தங்களது விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பதிவாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரினைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் உரிய தகவல்கள் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும்.

6. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் விதத்தில் தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக கீழ்க்குறிப் பிடப்படும் ஆவணங்களில் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்ப தாரரது பரீட்சார்த்த உரிமையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

7. **விண்ணப்பங்கள்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்தின் 1 தொடக்கம் 5 வரையான பந்தி முதலாவது பக்கத்திலும் இலக்கம் 6 தொடக்கம் எஞ்சிய பந்தி அடுத்த பக்கத்திலும், உள்ளடங்கும் விதத்தில் "ஏ4" அளவிலான கடதாசியில் விண்ணப்பத்தினைத் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பம் தட்டெழுத்துச் செய்து தயாரிக்கப்பட்டாலும் அது சரியாகத் தெளிவான விண்ணப்பதாரரின் கையெழுத்தினால் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இத்துடன் உள்ள மாதிரிக்கிணங்க தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டியது ஒரு விண்ணப்பமே ஆகும் என்பதுடன் விண்ணப்பத்தின் போட்டோப் பிரதியினை அனுப்பப்படல் ஆகாதென அறிக்கப்படுகின்றது. மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்குப் பொருந்தாத விண்ணப்பப்பத்திரங்கள், பூரணமற்ற தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்பத்திரங்கள் தகவலளிக்காமல் இரத்துச்செய்யப்படும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள மொழி விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழி விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடவும். மேலும், பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளதா என்பது பற்றி விண்ணப்பதாரரினால் சோதித்துப் பார்த்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் போட்டோப் பிரதியினைத் தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமானது.

முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் பகுதிக்கு முதலாவது தடவை தோற்றும்பொழுது பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. எனினும் அதன் பின்னர் தோற்றும் தடவைகளுக்கு கீழ்க்குறிப்பிடப்பட்ட விதத்தில் பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும் :-

முழுப் பரீட்சைக்கும் 400 ரூபா ;
ஒரு பாடத்திற்கு 200 ரூபா.

இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் அரச வருமானத்திற்கு வரவு வைக்கும் விதத்தில் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால்/உப தபால் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்திற்காக பணக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படாததுடன் பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணம் எக்காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்துவதற்கு அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்பட மாட்டாது.

8. விண்ணப்பங்கள் சமர்ப்பித்த அலுவலர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணையின் பிரதியுடன் பரீட்சைப் பிரவேசப்பத்திரம் அனுப்பிவைக்கப்படும். விண்ணப்ப தாரருக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் அது பற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் சென்றதன் பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்படும் பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்பதாக அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகளாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்திருக்கும் விண்ணப்பப் படிவத்தின் பிரதியினையும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால் உரிய பற்றுச்சீட்டின் பிரதியினையும் விண்ணப்பத்தினை தபாலில் இடும்பொழுது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு இருக்குமாயின் அதனையும் தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயரினைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தில் விசாரணையினை மேற்கொள்ளுமாறு அறிவிப்பதுடன், கொழும்புக்கு வெளியிலான விண்ணப்பதாரராயின் தங்களது மேற்படி விபரங்கள் மற்றும் பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை தொலைநகல் மூலம் தங்களுக்கு அனுப்புவதற்காக தங்களின் தொலைநகல் இலக்கத்தினையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதத்தினை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் சமர்ப்பித்து விசாரித்தறிதல் கூடிய பயனைத் தரும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலரினால் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திக்கு பிரவேசப்பத்திரத்தினை வழங்கல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய் துள்ளவராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகக் கருதப்படக்கூடாது.

9. பரீட்சைகள் ஆணையாளரினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் உடைய அலுவலருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இயலுமான விதத்தில் நிறுவனத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பிரயாணக் கொடுப்பனவு வழங்கப்படலாகாது.

10. இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். உரிய சேவைக்கு உட்புகுவதற்காக தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அலுவலருக்கு இயலும். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் இணைந்த அலுவலர்கள் தான் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியில் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழியினை மாற்றுவதற்கு இடமளிக்கப்படாது.

11. தான் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்காகவும் வெவ்வேறாக மற்றும் வெவ்வேறு தடவைகளில் தோற்றுவதற்கு அலுவலருக்கு இயலும். எவ்வாறாயினும் சித்தியடைதலுக்காக ஒவ்வொரு பாடங்களிலும் நியமப்படுத்தப்பட்ட மொத்தப் புள்ளிகளினைக் குறைந்தது ஒரு வினாத்தாளுக்கு நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

12. அரச மொழிக் கொள்கைக்காக அனைத்து அலுவலரினாலும் தமது விண்ணப்பப்படிவம் அரச மொழியிலேயே தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவை அம்மொழியிலேயே பூரணப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

13. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களினதும் பெறுபேறுகள் உள்ளடங்கிய பெறுபேற்று அட்டவணை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பதிவாளர் நாயகத்திற்கு வெவ்வேறாக வழங்கப்படும். பரீட்சையில் சித்திபெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

14. **பரீட்சை முறை**.- பரீட்சார்த்திகள் கீழ்க்குறிப்பிடப்படும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்துமூல பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் :

| விடய இலக்கம் | விடயம் | கால அளவு | அதி கூடிய புள்ளிகள் | சித்திக்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக முறைகளும் நடைமுறைகளும் | 3 மணித்தியாலம் | 100 | 40 |
| 2 | நிதி முறைமை | 3 மணித்தியாலம் | 100 | 40 |

**14.1 விடய விபரங்கள் :**

| வினாத்தாள் | விடய விபரங்கள் |
|---|---|
| அலுவலக முறைகளும் நடைமுறைகளும் | (அ) தாபன விதிக்கோவையின் அத்தியாயம் III, IV, V, VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XXIV, XXVII மற்றும் XXVIII<br>(ஆ) அரச சேவைகள் ஆணைக்குழுவின் கடமை முறைமைகளும் ஒழுங்குகளும் |
| நிதி முறைமை | (அ) நிதி ஒழுங்குவிதிக் கோவையின் அத்தியாயம் I, II, III, IV, V, VI, VII, VIII<br>(ஆ) அரசின் கேள்விச்சபையின் நடைமுறைகளின்கீழ்-<br>* வேலை வழங்கல் மற்றும் சேவைகள்<br>* பொருட்கள்/சொத்துக் கணக்கிடலின் பாதுகாப்பு மற்றும் பொருள் மீளாய்வு |

15. இப்பரீட்சையின் அறிவித்தல் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படுவதுடன் அம்மொழிகளுக்கிடையில் ஏதாவது ஒத்துப்போகாத தன்மை இருக்குமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தல் மேலோங்கும் என்பதனைக் கருத்தில் கொள்ளவும். மேலும் இங்கு குறிப்பிடப்படாத ஏதாவது விடயங்கள் இருக்குமாயின் அது சம்பந்தமாக பதிவாளர் நாயகம் மூலம் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.
2015, மாச்சு 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

பதிவாளர் நாயகம் திணைக்களம்

**பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2014 (2015)**

First Efficiency Bar Examination for the Officers of Grade III Class II of the Registrar Service - 2014 (2015)

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மொழிமூலம் :
(சிங்களம்-2/தமிழ்-3)
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

1. 1.1 முதல் எழுத்தினை கடைசியில் இட்டு முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : GUNAWARDHANA, M. G. B. S. K.

1.2 முதல் எழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.3 முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

2. தொழில் முகவரி :

2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. பால் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. தாங்கள் தோற்றும் பாடம்/பாடங்கள் :

| பாடம் | பாட எண் |
|---|---|
| | |
| | |

6. தற்பொழுது வகிக்கும் பதவி :

6.1 பதவி :----.

6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

6.3 பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி :

7. **விண்ணப்பதாரரது சான்றிதழ்**.- மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் மேற்குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமை உள்ளதென்றும், பரீட்சை நடாத்தல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் மூலம் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் பரீட்சைகள் சட்டத்தின் அனைத்து ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என இத்தால் பிரதிக்கினைப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தனது திணைக்களத்தின் தலைவர் அல்லது திணைக் களத்தில் தலைவருக்காக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்ற அலுவலர் முன்னிலையில் விண்ணப்பதாரரினால் ஒப்பமிடப்படல் வேண்டும்.

**கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் அலுவலரான மற்றும் நான் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான திரு./திருமதி/செல்வி ............................ அவர்கள் ................................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பத்தினை இட்டார் என உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சைக்கு உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(பதவி முத்திரையினை இடவும்.)

**திணைக்களத் தலைவரின் சிபாரிசு**

(i) மேலே தரப்பட்ட விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும்,
(ii) அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றவர் என்றும்,
(iii) அலுவலர் ................................ ஆந் தடவை இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றார் என்றும்

நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(பதவி முத்திரையினை இடவும்.)

3-800

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2015)

REGISTRAR GENERAL DEPARTMENT

Open Competitive Examination for Recruitment to the Post of the Registrars Grade II of Class III Service - 2014 (2015)

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை 2015, யூலை மாதம் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கிணங்க கூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் இப்பதவிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்படுவர். இப்பரீட்சை கீழ்க்காணப்படும் நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்கள் மற்றும் நகரங்களுக்குரிய நகர இலக்கங்கள் கீழ்க்காணப் படுகின்றன. போதுமானளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அல்லது வேறு காரணங்களினால் அல்லது ஏதாவது பரீட்சை நிலையத்தினை இரத்துச்செய்து பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பின் பிரகாரம் பரீட்சை நிலையத்தினை தீர்மானிக்கும் எண்ணம் பரீட்சை ஆணையாள ருக்கு உரியது. மேலும் உத்தேசித்த நகரங்கள் அனைத்திலும் கூடிய எண்ணிக்கையான பரீட்சை மத்திய நிலையத்தினை நிறுவுவதற்காக போதுமானளவு விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை இல்லாதவிடத்து பரீட்சையானது கொழும்பில் நடாத்துவதற்காக பரீட்சை ஆணையாளர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| யாழ்ப்பாணம் | 10 |
| அம்பாறை | 16 |
| அநுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |

இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கு அல்லது இரத்துச்செய்வ தற்கு திணைக்கள தலைவருக்கு அதிகாரம் உண்டு.

*3.* **சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அமைவாக பதிவாளர் சேவை III ஆம் வகுப்பின் II ஆம் தர பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படும் :-

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்தானது மாகும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையினை செலுத்துதல் வேண்டும்.

(ii) தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச சேவையின் பொது நிபந்தனைகளுக்கும், இதுவரை வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்படல் வேண்டும். அவ்வாறே தாபனக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 தொடக்கம் 12 வரையான பிரிவுகளுக்கும் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச சேவை ஆணைக் குழுவின் அலுவலக நடவடிக்கையின் ஒழுங்குமுறையின் 1 ஆவது காண்டத்தின் அத்தியாயத்திற்கும் உட்படல் வேண்டும்.

(iii) சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு பயிற்சிக்கு உட்படல் வேண்டும்.

(iv) அரச சேவைக்குப் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் மூன்று (03) வருடங்கள் தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

(v) அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் ஒரு வருடம் பூர்த்தியாகும் வரை பதில் சேவை அடிப்படையில் நியமனம் செய்யப்படுவர்.

(vi) பதவியில் நியமனம் பெற்று மூன்று வருடங்கள் முடிவதற்குள் பதிவாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படும் தாபனத்தி னால் நடாத்தப்படும் வினைத்திறன்காண் தடை எழுத்துப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும். வயதினை அடிப்படை யாகக் கொண்டு வினைத்திறன்காண் தடையில் விடுப்பு வழங்கப்பட மாட்டாது.

(vii) பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டதன் பின் அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்களின் முன்னைய சேவையின் அங்கத்துவம் முடிவுறுவதோடு. அச்சேவைக்கு மீள திரும்புவதற்கான உரித்து இல்லாது போகும்.

*4.* **சம்பளத் திட்டம்.**- எம்என்-5-2006(ஏ)- ரூபா 16,720-10 x 320-11 x 365-15 x 450- ரூபா 30,685. 6/2006 (iv) சுற்றுநிருபம்

*5.* **வயதெல்லை.**- வயது 21 வருடங்களுக்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (''அதற்கிணங்க 1994.04.24 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்பதாக மற்றும் 1980.04.24 ஆந் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியுடைய நபர்களுக்கு மட்டும் இதற்காக தகைமைகள் உள்ளது'').

*6.* **கல்வித் தகைமைகள்.**- 2015.04.24 ஆந் திகதிக்கு கீழ்க்காணப் படும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலும் கடமை புரிவதற்கும் பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்கான சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்டதாரியாக இருத்தல்.

அல்லது

(iii) சட்டக் கல்லூரியினால் நடாத்தப்படும் இறுதி சட்டப் பரீட்சையில் சித்திபெற்று உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த சட்டத்தரணியாக இருத்தல்.

*7.* **சேர்த்துக்கொள்ளப்படும் முறை.**- விண்ணப்பத்தினைக் கோரி தகைமைகளினை உடைய விண்ணப்பதாரர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையின் பெறுபேறு களுக்கிணங்க சேர்த்துக்கொள்ளப்படுவர். பரீட்சையில் வெற்றிபெறு வதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்டதாக புள்ளிகளைப் பெறல் வேண்டும். அவ்வாறு பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர்களை தெரிவுசெய்து, அவர்களின் அப்புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு இணங்க, மேலதிக புள்ளிகளைப் பெற்றவர்கள் ஒழுங்குமுறையில் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சான்றிதழ்களை பரிசீலனை செய்தலுக்காக மட்டுமே சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

*8.* **பரீட்சைக் கட்டணங்கள்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும்.

இப்பரீட்சைக் கட்டணம் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் அரச வருமானத்திற்கு வரவு வைக்கும் விதத்தில் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால்/உப தபால் அலுவலகத்திற்கு பணத்தினைச் செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்திற்காக பணக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படாததுடன் பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணம் எக்காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்துவதற்கு அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானது.

*9.* **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பப்படிவமானது, இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திற்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் இடவும். அதனை கடதாசியின் இரு பக்கத்தினையும் உபயோகித்து, 8 1/2" x 12" விசாலமுடைய கடதாசியில் தயாரிக்குக. மாதிரி விண்ணப்பப்படிவத்தின் விடயங்கள் 1 தொடக்கம் 6 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலும் தயாரிக்குக. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு பொருந்தாத விண்ணப்பப்படிவங்கள், பூரணமற்ற தகவல்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்கள் தகவல் அளிக்காமல் இரத்துச்செய்யப்படும். அவ்வாறே பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதா என விண்ணப்பதாரர் விசாரித்து அறிந்துகொள்வதோடு, அவ்வாறு இன்றேல் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானது.

(ஆ) விண்ணப்பப்படிவத்தினை விண்ணப்பதாரர் தாம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமைபெற்ற மொழியிலேயே பூரணப்படுத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் 2015.04.24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர், பதிவுத்தபாலில் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்பத் திரங்கள் இடப்பட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2014(2015)" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு**.- அரசாங்க சேவையில்/மாகாண சேவையில் உள்ளவர் களின் விண்ணப்பங்கள் தங்களது திணைக்களத் தலைவரினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஈ) அனைத்து வகைகளிலும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் இடுகையில் விண்ணப்பப்படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதித்தல் சம்பந்தமாக செய்யப்படும் எந்தவொரு முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி, உரிய விதத்தில் விண்ணப்பத்தினைப் பூர்த்திசெய்து, உரிய தினத்திற்கு முன்னர் அனுப்பப்படும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அனுமதி அட்டைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அனுப்பப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடனேயே அது பற்றிய பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்படும், பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்பதாக அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகளாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அமைப்பு மற்றும் உள்நாட்டு பரீட்சைக் கிளையில் விசாரணை மேற்கொள்ள முடியும். அவ்வாறு விசாரணை மேற்கொள்ளும்பொழுது விண்ணப்ப தாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியினை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியிலான வதிவிடதாரியாயின், அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியினை கூடிய விரைவில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தினைக் குறிப்பட்டு விண்ணப்பக் கடிதத்தினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்குச் சமர்ப்பித்து விசாரணையினை மேற்கொள்ளல் கூடிய பயனைத் தரும். அவ்வாறு விசாரணையினை மேற்கொள்ளும் பொழுது பரீட்சைத் திணைக்களத்தில் விசாரணை செய்யப்படும் எந்தவொரு தகவல்களினையும் உறுதிப் படுத்துவதற்காக தன்வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் விண்ணப்பத்தினை தபாலில் இடும்பொழுது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டினை தயார் நிலையில் வைத்திருத்தல் உபயோகமானதாகும்.

10. **பரீட்சை நிலையத்திற்குள் உட்புகுதல்**.- (i) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள், பரீட்சை நிலையத்தின் நிர்வாகியிடம் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய பிரவேசப் பத்திரத்தினை சமர்ப்பித்தல் வேண்டும். தனது பிரவேசப்பத்திரத் தினைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(ii) அனைத்து பரீட்சார்த்திகளும் தனக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் பரீட்சையாளர்களால் கடைப்பிடிக்க வேண்டிய பொது சட்டதிட்டங்களுக்கு உட்படல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்திக்கு பிரவேசப்பத்திரத்தினை வழங்கல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளவ ராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகக் கருதப்படக் கூடாது.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் சம்பந்தமாக பரீட்சை நிலைய நிருவாகி திருப்திப்படும் விதத்தில் தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அது சம்பந்தமாக கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) வழங்கப்பட்ட திகதி, பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு 3 வருடங்களுக்கு மேற்படாதவாறாக செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு.

12. **உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குதல்**.- (அ) பரீட்சார்த்தி தகைமையற்றவராக தெரியவரின், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தப்படும் காலப்பகுதியில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த தகைமையினை இரத்துச்செய்வதற்கு இடமுண்டு.

(ஆ) பரீட்சை நடாத்தப்படல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் மூலம் மேற்கொள்ளப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்தி உட்படல் வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மூலம் மேற்கொள்ளப்படும் தண்டனைக்கு அவர் கட்டுப்படல் வேண்டும்.

13. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் சம்பந்தமாக அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

14. **பரீட்சை நடைமுறைகள் :**

(i) மொழி மூலம்-

(அ) சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் ஒரு மொழியில் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) அனைத்து விண்ணப்பதாரர்களும், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்திலேயே அனைத்து வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(இ) தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) *பாடங்களும் அது தொடர்பான விபரங்களும்.*- பரீட்சையானது, கீழ்க்காணப்படும் விடயங்கள் சம்பந்தமான எழுத்து மூல வினாப்பத்திரங்களை உள்ளடக்கியதானதாகும் :

| விடயம் | விடய இலக்கம் | கால அளவு | அதி கூடிய புள்ளிகள் | சித்திக் கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| நுண்ணறிவு | 1 | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| பொது அறிவு | 2 | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழியும் கட்டுரையும் | 3 | 1 மணித்தியாலம் | 100 | 40 |

**விடய விபரங்கள் :**

| வினாத்தாள் | விடய விபரங்கள் |
|---|---|
| *நுண்ணறிவு.*- வினாத்தாள்கள் தெரிவுசெய்யப்பட்ட மற்றும் சுருக்கமான வினாக்களுடன் கூடிய 50 வினாக்களைக் கொண்டது. | பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாக ஆராயும் திறன் மற்றும் வாய்மொழி மூலமல்லாத விடயத்துடன் தொடர்புபட்டதான தகவல்கள் பற்றிய ஆற்றல் மற்றும் நுண்ணறிவினை பரிசீலிக்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்படும் வினாப்பத்திரங்கள். |
| *பொது அறிவு.*- வினாத்தாள்கள் தெரிவுசெய்யப்பட்ட மற்றும் சுருக்கமான வினாக்களுடன் கூடிய 50 வினாக்களைக் கொண்டது. வினாக்கள் அனைத்திற்கும் விடை யளிக்க வேண்டும். | இலங்கையின் சமூக மற்றும் கலாச்சார முறைகள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுடன் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றம் சம்பந்தமான பரீட்சார்த்தியின் பொது அறிவினைப் பரீட்சிப்பதற்கான வினாப்பத்திரம். |
| *மொழியும் கட்டுரையும்.*- வினாத்தாள்கள் தெரிவு செய்யப்பட்ட மற்றும் சுருக்கமான வினாக்களுடன் கூடியது. வினாக்கள் அனைத்திற்கும் விடையளித்தல் வேண்டும். | தரப்படும் தலைப்பு மற்றும் கருப்பொருளின் கருத்து மற்றும் தகவல்களினை சமர்ப்பித்தல், கோவையிடல் மற்றும் தகவல் பரிமாற்றம் சம்பந்தமாக பரீட்சார்த்தியின் அறிவைச் சோதித்தல். |

15.சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படும் மொழிகளுக்கிடையில் ஏதாவது ஒத்துப்போகாத தன்மை இருக்குமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தலுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.
2015, மாச்சு 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

பதிவாளர் நாயகம் திணைக்களம்

**பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2015)**

Registrar General's Department

Open Competitive Examination for Recruitment to the Post of Registrars Grade II of Class III Registrar Service - 2014 (2015)

☐
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மொழிமூலம் : ☐
(சிங்களம்-2/தமிழ்-3)
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

* வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் நகரம் மற்றும் மாவட்டத்தின் இலக்கத்தினைக் குறிப்பிடவும்.

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

1. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : GUNAWARDHANA, M. G. B. S. K.
(ii) முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. முகவரி :
(i) நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(ii) நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
(iii) அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

3. பால் : ☐
பெண்-1, ஆண்-0
(கூட்டினுள் உரிய இலக்கத்தினை இடவும்)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? : ☐
விவாகமானவர் -1
விவாகமாகாதவர் -2
(கூட்டினுள் உரிய இலக்கத்தினை இடவும்)

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :
☐☐☐☐☐☐☐☐☐☐

6. (i) பிறந்த திகதி :
ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐
(ii) 2015.04.24 ஆந் திகதியன்று வயது-
வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

7. பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தாங்கள் தகைமை பெற்ற பரீட்சை அறிவித்தலின் எந்த பந்தியின்கீழ் என்பது-

6 (ii) அல்லது 6 (iii) :----.

7.1 6 (ii) பந்திக்கு கீழாயின்,
பெற்ற பட்டம் :----.

தகைமையைப் பூர்த்திசெய்த திகதி :----.

6 (iii) பந்திக்கு கீழாயின்,
நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

8. (கழற்ற முடியாதவாறு பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்)

கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.

(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.

(iii) செலுத்திய கட்டணம் :----.

9. **விண்ணப்பதாரரது சான்றிதழ்.**- இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட விபரங்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் ............................ மற்றும் ........................... ஆந் திகதிய பற்றுச்சீட்டினை இதில் இணைத்துள்ளதாக பிரதிக்கினை செய்கின்றேன். பரீட்சைகள் ஆணையாளர் மூலம் நடாத்தப்படும் சட்டதிட்டங்களுக்கிணங்க செயலாற்றுவதற்கும், இப்பரீட்சை சம்பந்தமான நிபந்தனைகளுக்கும் இணங்க நான் தகைமையற்றவன் எனத் தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பின்னர் எனது பரீட்சார்த்தி தகைமையை இரத்துச்செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும், நியமனம் பெற்ற பின்னர் தெரியவரின், நான் நஷ்டஈடெதுவுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

10. **விண்ணப்பதாரர்களின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்.**- மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட திரு./ திருமதி/ செல்வி ............................ அவர்கள் எனக்கு தெரிந்தவர் எனவும், இன்றைய தினம் எனது முன்னிலையில் அவரின் கையொப்பத் தினை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் அவர் பரீட்சைக்கு உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(பதவி முத்திரையினை இடவும்.)

11. **திணைக்களத் தலைவரின் சிபாரிசு.**- மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட திரு./திருமதி/செல்வி ............................ அவர்கள் இந்த நிறுவனத்தில் சேவையாற்றுபவர் எனவும், அவர் மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், இப்பதவிக்காக தெரிவுசெய்யப்படின் இந்த நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிப்பதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(பதவி முத்திரையினை இடவும்.)

3-801

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.